1979 ஏப்ரல் 20]

## கல்லூரிகளில் ராக்கிங் முறை.

*வினா எண். 743— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் மாணவர்கள் ராக்கிங் செய்யும் முறைகளை நீக்கிட அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) & (ஆ) கல்லூரிகளில் புதிய மாணவர்களைக் கேலிக்குள்ளாக்கும் முறைகளை உறுதியான நடவடிக்கை மேற்கொண்டு தடுக்கப்படுதல் வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் மூலமாக கல்லூரி முதல்வர்கள் கோரப்பட்டுள்ளனர்.

திரு. கே. பி. நாச்சிமுத்து கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் செயலர் அவர்கள் கல்லூரிகளில் மாணவர்கள் 'ராக்கிங்' செய்வது பற்றிச் சொன்னார்கள். அதேபோல் கல்லூரிகளில் மாணவிகளும் 'ராக்கிங்' செய்வது பற்றி அமைச்சரின் செயலர் அவர்களுக்குத் தெரியுமா ? அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் ?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள், என்பதில் மாணவிகளும் அடங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, 'ராக்கிங்' என்பது லா அண்டு ஆர்டர் பிராப்ளமாக மாறிக்கொண்டு, மிகவும் 'மோஸ்ட் இன்ஹ்யூமன்' ஆக மிருகத்தனமாக பல கல்லூரிகளில் நடந்து வருகிறது. அவர்கள் ஆர்டர் அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். * * சில மாணவர்கள் ரெசிஸ்ட் பண்ணுகிறார்கள். அப்படி ரெசிஸ்ட் பண்ணக்கூடிய மாணவர்களையே அரஸ்ட் பண்ணக்கூடிய நிலை வருகிறது. இன்னும் பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. அவைகளைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. இதைப் போலீஸ்தான் அடக்க வேண்டும்

---

*மாண்புமிகு மாற்றுத் தலைவரின் (பக்.801) ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

என்று சொல்லவில்லை. இப்படி சீரியஸ் புரபோர்ஷனாக வரக் கூடிய இந்த விஷயத்தை, ஆர்டர் போட்டு விடுவதோடு நிற்காமல், இந்த ஸ்டூடன்சிலே ஒரு சின்ன செக்ஷன் மாத்திரம் இப்படிச் செய்வதால், அவர்களை மட்டும் அய்சோலேட் செய்து மெஜாரிடி ஸ்டூடன்சை இதிலிருந்து காப்பாற்றுவதற்கு அரசாங்கம் தக்க ஏற்பாடுகள் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இரண்டு இடங்களில் அப்பேர்ப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. (1) மண்டலப் பொறியியற் கல்லூரி, திருச்சி, (2) அண்ணாமலை பொறியியற் கல்லூரி, ஆகியவைகளில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றது. ஆகவே, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அவைகள் ஒடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக்கழகம் மூலம் கட்டப்பட்ட வீடுகள்.

*வினா எண். 744—திரு. எம். கண்ணன்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரிசன நல வீட்டுவசதி வாரியத்தின்கீழ் 1977–78, 1978-79 ஆண்டுகளில் எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன?

(ஆ) எத்தனை வீடுகள் கட்டுமான வேலையில் உள்ளன? அவை எப்பொழுது முடிக்கப்படும்?

(இ) வரும் ஆண்டில் எத்தனை ஆயிரம் வீடுகள் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் மூலம் 1977-78 ஆண்டில் 1,850-ம், 1978–79 ஆம் ஆண்டில் 2,448 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) 2,704 வீடுகள் கட்டுமான வேலையில் உள்ளன. அவை விரைவில் கட்டி முடிக்கப்படும்.

(இ) 1979–80-ம் ஆண்டில் வீடுகள் கட்டுவது குறித்து அந்த நிதி ஆண்டில் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

தலைவர் அவர்களே அடுத்த இரண்டு கேள்விகளையும் இதோடு சேர்த்தேஎடுத்துக் கொள்ளலாம்.